பக்கங்கள்: எட்டு

யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 17 வெள்ளிக்கிழமை (3-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 293

## வடக்குடன் இணைக்க—

# திருமலையிலும், மட்டக்களப்பிலும் முதலில் சர்வஜன வாக்கெடுப்பு!

### வாக்களிப்பு வென்றால் தென்கிழக்கு பிராந்திய சபையும் வரும்

கொழும்பு, ஒக்ரோபர் 3

வடக்குடன் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை இணைப்பதற்கு முதலில் அந்த இரு மாவட்டங்களிலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும். அந்த வாக்கெடுப்பில் இணைப்புக்கு மக்களின் ஆதரவு கிடைத்தால் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கி தென்கிழக்கு பிராந்தியசபை உருவாக்கப்படும். அம்பாறையின் ஏனைய பகுதிகள் தனிப் பிரிவாக இயங்கும் அல்லது ஊவா மாகாணத்துடன் இணைக்கப்படும்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருமலையிலும் மட்டக்களப்பிலும் நடைபெறும் சர்வஜன வாக்கெடுப்பில் வடக்குடன் இணைவதற்கு ஆதரவாக மக்கள் வாக்களிக்கத் தவறுவார்களேயானால் வடக்கும் கிழக்கும் தனித் தனிப் பிராந்தியங்களாக இயங்கும் என்றும் பீரிஸ் கூறினார்.

அமைச்சர் பீரிஸ் தெரிவித்ததாவது;-

கடந்த திங்கட்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப இதற்குத்தான் இவ்வளவு நாளும் இழுபறிப்பட்டவையோ...!

## வடக்கு-கிழக்கு துண்டுகளானால் பிரச்சினை மேலும் மோசமடையும்

### வடக்கு - கிழக்கு இணைந்த தீர்வே தேவை என்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஒக். 3

''வடக்கு — கிழக்கு மாகாணத்தை பல துண்டுகளாகப் பிரிப்பதும் ஒவ்வொரு துண்டுக்கும் வாக்கெடுப்பு நடத்துவதும் இனப்பிரச்சினை மேலும் தீவிரம் அடையவே வழிவகுக்கும். அரசாங்கம் நீதியான தீர்வு ஒன்றைக் காணவிரும்புமேயானால் வடக்கு — கிழக்கு ஒரே நிர்வாக அரசியல் அலகு என்ற அடிப்படையில் அதிகாரப் பகிர்வை வழங்க முன்வர வேண்டும்.''

அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் குறித்து ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாருக்கான கப்பல் சேவை இரு வாரத்தில் இடைநிறுத்தம்

### காலநிலை சீரின்மை காரணமாம்

மன்னார், ஒக். 3

தலைமன்னாரில் இருந்து காங்கேசன்துறைக்கு இடம்பெற்று வரும் பயணிகள் கப்பல் சேவையை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இடைநிறுத்துமாறு கடற்படையினர் அறிவித்துள்ளனர் என்று மன்னார் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மழை, காலநிலை சீரின்மை ஆகியவை காரணமாக இச் சேவையை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஜனவரி நடுப் பகுதிவரை இடைநிறுத்துமாறு கடற்படையினரால் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதே நேரம் — வவுனியா நகரில் இருந்து மன்னாருக்கு வந்துள்ள 62 அகதிகள் அடுத்த கப்பல் சேவையில் யாழ்ப்பாணம் அனுப்பப்பட விருப்பதாகவும் —

திருகோணமலையில் தங்கியுள்ள அகதிகளை மன்னாருக்கு அழைத்து வந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்ப நடவடிக்கைஎடுக்கப்படுகிறது என்றும் — அவர் கூறினார்.

## வாழைச்சேனை பகுதியில் மோதல்

மட்டக்களப்பு, ஒக். 3

மட்டக்களப்பு வாழைச்சேனையில் பொலீஸாருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இம் மோதலில் இரு தரப்புக்கும் ஏற்பட்ட சேத விவரம் தெரியவில்லை.

இம் மோதலில் சிக்கி இரு பொதுமக்கள் காயமடைந்து வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-21-3)

## மட்டு. படைத் தலைமையகம் மீது புலிகள் மோட்டார் தாக்குதல்!

### பதில் தாக்குதலில் வவுணதீவில் நால்வர் காயம்

மட்டக்களப்பு, ஒக். 3

மட்டக்களப்பு நகரில் உள்ள 3 ஆவது பிரிக்கேட் தலைமையகம் மீது நேற்று முன்தினம் இரவு 9-30 மணியளவில் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வவுணதீவில் இருந்து புலிகள் இத்தாக்குதல் நடத்தியதால் படையினர் அந்தப் பகுதியைநோக்கி பதில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

படையினர் ஏவிய ஷெல் ஒன்று வவுணதீவில் உள்ள வீடு ஒன்றின் மீது விழ்ந்து வெடித்ததால் தாய், கணவன், மனைவி, அவர்களது பிள்ளை ஆகியோர் படுகாயமடைந்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேச

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சாதகமான பதில் கிடைக்காவிட்டால்

## நாடாளுமன்றம் முன் உண்ணாவிரதம்!

வவுனியா, ஒக். 3

யாழ். குடாநாட்டில் கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்களின் விவரங்களை உடன் வெளியிடக் கோரியும்—

பெற்றோர் மற்றும் பாதுகாவலர் அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்து கொடுக்குமாறு கோரியும்

தெற்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை வடக்கில் தடுத்து வைக்குமாறு கோரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி, முல்லைத்தீவு கடலில் கடற்படையினர் தாக்குதல்

### படகுகள் மூழ்கடிப்பு எனத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3

பூநகரிக் கடலேரியிலும், முல்லைத்தீவுக் கடற்பகுதியிலும் விடுதலைப் புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நடத்தியதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

பூநகரிக் கடலேரியில் நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் 3 தற்கொலைப்படைப் படகுகள் எரிபொருள், வெடிமருந்து ஆகியவற்றுடன் சென்றதாகவும்—

அவை வெடித்து தீப்பற்றியதாகவும்—

இதில் 10 கடற் புலிகள் உயிரிழந்தனர் என்றும்— கடற்படையினர் தெரிவித்தனர்.

அதேநேரம் — நேற்றுக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் 8 மீனவர்களை காணவில்லை என அறிவிப்பு

வவுனியா, ஒக். 3

முல்லைத்தீவு கள்ளப்பாடு என்னும் இடத்தில் இருந்து நேற்று முன்தினம் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் 8 பேரைக் காணவில்லை; 3 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் என்று ''புலிகளின் குரல்'' வானொலி நேற்றுத் தெரிவித்தது.

இந்த மீனவர்கள் சென்ற 5 படகுகள் முன்றாக அழிக்கப்பட்டுள்ளதாகவும்—

20 படகுகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

செ. சிவமகாராசா, ராஜரத்தினம், மயில்வாகனம், தங்கராசா, றொபின்சன், ஜீவராசா ஆகியோர் காணாமல் போனவர்களில் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-164-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக் கழக

# வெளிவாரிப் பரீட்சை வவுனியாவிலும் நடக்கும்

வடமராட்சி, ஒக். 3

யாழ். பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கான வெளிவாரிப்பரீட்சை வவுனியா வளாகத்தில் முதல் தடவையாக இம்மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வவுனியா வளாகத்தில் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கு கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து வெளிவாரிப்பட்டப் படிப்பை மேற்கொண்டுள்ள மாணவர்கள்தோற்றுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பரீட்சை போன்று எதிர்வரும் காலங்களில் விஞ்ஞானப் பிரிவுக்கான வெளிவாரிப்பரீட்சையும் அங்கு நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-173)

## கருக்கெழுத்து கழக ஆண்டு நிறைவு விழா

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் நடத்தும் 12 ஆவது நிறைவு விழாவும், 10 ஆவது சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகார சபை மாகாண முகாமையாளர் பி. இராமநாதன் பிரதம விருந்தினராகவும் ''யுனெஸ்கோ'' இணைப்பாளர் கோ.சி. வேலாயுதம், யாழ் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி என். சி. தட்சணாமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

தமிழ் சுருக்கெழுத்து அறிவுப் போட்டி கவிஅரங்கு நாடகம் என்பனவும் இடம்பெறும். (ஐ-137)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள்
கல்வியாண்டு
1995 / 1996

முதற்கலைத் தேர்வு
1996

முதல் வர்த்தகத் தேர்வு
1996

மேற்படி பரீட்சைகள் 1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் நடைபெறவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
(சி/1679)



A/L 99
கிரயக்கணக்கீடு
ஆரம்பம்: 06-10-1997
3-30 p.m.
ஆசிரியர்:
திரு. முகுந்தன்
College of Commerce,
Navalar Road,
Jaffna.
(49804)



தேவை

சர்வதேச தொண்டு நிறுவனமான
MSF இற்கு
(வரையறையற்ற வைத்திய சேவை நிறுவனத்திற்கு)
யாழ். நகரில்
பெரிய வீடு ஒன்று
வாடகைக்கு தேவைப்படுகின்றது.

தொடர்பு:
MR. KEITH,
C. L S. புத்தக நிலைய ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (50245)



திரு கல்வி நிறுவனம்
கோண்டாவில்
A/L 97 DAY CALSS
கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பம்
காலம் 6 — 10 — 97 திங்கள் காலை 9.00 மணி
ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | சண் |
| கணக்கீடு | — | கொலின் சிவா |
| வணிகக் கல்வி | — | பிரபல ஆசிரியர் |
| வணிகப்புள்ளி விவரவியல் | — | ஸ்ரனிஸ் |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — | சிவமகாலிங்கம் |
| தமிழ் | — | ஆர்த்திகன் |
| அளவையியல் | — | சயந்தன் |
| புவியியல் | — | தேவா |
| நாடகம் | — | சத்தியா |

(49803)


# யாழ். மாநகரப் பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

## ஒரு மாதகாலத் திட்டம் திங்களன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளிபு இவ் வருடமும் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பு ஊசிமருந்து போடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கட்டாக் காலி நாய்களின் தொல்லை மீண்டும் இப்பகுதியில் தலைதூக்கியிருப்பதைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஒரு மாத காலத்திற்கு பகுதி பகுதியாக தடுப்புஊசி போடப்பட உள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

தடுப்பு ஊசி மருந்து போடப்படும் காலம், இடம் என்பனவற்றை அந்தந்தப் பகுதி குடும்ப நல உதவியாளர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மூலமும், பத்திரிகைகளில் அவ்வப்போதும் தெரியப்படுத்தப்படும். நகரக் குடியிருப்பாளர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூஊசி மருந்து போட்டு இந்நோயை முற்றாக ஒழித்துக் கட்ட ஒத்துழைக்குமாறும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் கேட்டுள்ளார்.

இதேவேளை யாழ்.மாநகர சபைப் பகுதியில் விசர்நாய்க் கடி நோய்த் தடுப்புத் திட்டம் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் சென்றவருடம் முதல் இக்காலப் பகுதி வரை விசர் நாய்க் கடியினால் எவரும் இறப்பைச் சந்திக்கவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ஐ-4)

## மலரஞ்சலி நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 3

தந்தை செல்வா நினைவாலயத்தில் இன்று காலை 9 மணிக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும்.

அப்போதைய அரசுக்கு சவால் விடும் வகையில், தந்தை செல்வா தமது தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் பதவியைத் துறந்தமையை நினைவு கூருமுகமாகவே மலரஞ்சலி நடைபெறவுள்ளது.

தந்தை செல்வநாயகம் நினைவுக் குழு இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது. (அ)

## அரச ஊழியர் கூட்டம் நடைபெறாது

யாழ்ப்பாணம், ஒக். 3

அரசமைப்பு சீரமைப்பு சம்பந்தமாக இன்றும், நாளையும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது.

நாவலர் மண்டபம், கைலாசபதி கலையரங்கு, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம் ஆகியவற்றில் மேற்குறிப்பிட்ட திகதிகளில் நடைபெற இருந்த கூட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளது என யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (இ)

## தெல்லிப்பழை தபாலகம்

யாழ்ப்பாணம், ஒக். 3

இடம்பெயர்ந்து இதுவரை காலமும் கந்தரோடையில் இயங்கி வந்த தெல்லிப்பழை தபாலகம் மீண்டும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய முன்றலில் நேற்றுமுதல் இயங்குவதாக தபால் அதிபர் க. சத்தியமூர்த்தி தெரிவித்தார். (இ-3)

## இந்து தர்மம் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். இந்து சமயப் பேரவையின் ''இந்து தர்மம்'' மலர் — 15 வெளியீட்டு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

உரும்பிராய் கற்பக விநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ள இவ்விழா அருட்கவி சி. விநாசித்தம்பி தலைமையில் இடம்பெறும். தமிழர் புனர்வாழ்வு நிறுவன தலைவர் அ. நல்லதம்பி மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். நூலின் முதற் பிரதியையும் அவரே பெற்றுக் கொள்வார்.

வரவேற்புரையை சி. சக்திகிரீவனும், வாழ்த்துரையை து. வைத்திலிங்கமும், வெளியீட்டுரையை பேராசிரியர் வ. ஆறுமுகமும் ஆய்வுரையை கலாநிதி நா. ஞானகுமாரனும் நிகழ்த்த உள்ளனர். (இ-9)

## திருமலையிலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

டத்தின் போது அதிகாரப் பரவலாக்கல் அலகு பற்றி நீண்டநேரம் விவாதிக்கப்பட்டது.

அதிகாரப் பரவலாக்கல் அலகு எப்படியிருக்க வேண்டும் என்று மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் உறுதியாகத்தெரிவிக்கப்படவில்லை

வடக்கும், கிழக்கும் வெவ்வேறான அலகுகளாக இருக்க வேண்டும் என்றே தெரிவுக் குழுவில் கூறப்பட்டது.

தமது குறைந்தபட்ச எதிர்பார்ப்புக்களையாவது இது பூர்த்தி செய்ய வில்லை என்று தமிழ்க்கட்சிகள் தெரிவித்தன

எனவே இந்தப் பிரச்சினைக்கு முடிவு ஒன்றைப் பெறவேண்டுமானால் நிலைமையைக் கருத்தில் கொண்டு செயறபட வேண்டியுள்ளது.

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளுக்கான அலகைத்தீர்மானிப்பதில் குறிப்பிட்டபிரதேச மக்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும்

அந்த அந்த பிரதேச மக்களின் அனுமதியில்லாமல் அலகு தீர்மானிக்கப்படமாட்டாது.

### மட்டக்களப்பு திருமலையில் வாக்கெடுப்பு

இதன்படி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலைஆகியமாவட்டங்களில் பொது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது: இந்த இரு மாவட்டங்களும் தொடர்ந்து வடக்குடன் இணைந்திருக்க வேண்டுமா? அல்லது கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டுமா? என்பதை அந்த மாவட்ட மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

குறிப்பிட்ட இரு மாவட்டங்களின் மக்களும் வடக்குடன் தான் இணைய வேண்டும் எனத் தீர்மானிப்பார்களேயானால் அதன்படி மற்றும் பல தீர்மானங்களை எடுக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

### தென்கிழக்கு பிராந்திய சபை

இதன்படி கிழக்கு மாகாணத்தில் பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கி மற்றுமொரு அதிகார அலகு உருவாக்கப்படும்.

இதனை ஒரு முஸ்லிம் பிரிவாகக் கருதமுடியாது. அந்தப் பிரிவில் உள்ளடக்கப்படுவோரில் 41 சதவீதமானவர்கள் முஸ்லிம் அல்லாத மக்களே இருப்பார்கள். எனவே இந்தப் பிரிவு தென் - கிழக்கு பிராந்திய சபை என அழைக்கப்படும்.

அம்பாறை மாவட்டத்தில் எஞ்சிய பகுதி தனியான பிரிவாக இயங்கலாம். அல்லது ஊவா மாகாணத்துடன் இணைக்கப்படலாம் என்றும் அரசாங்கம் கருதுகிறது.

இனப்பரம்பலை அடிப்படையாகக் கொண்டு பிராந்திய சபைகளை ஏற்படுத்துவதை அரசாங்கம் எதிர்க்கின்றது

எனினும் இனப்பரம்பலை முற்றாகப் புறக்கணித்து விட்டு தற்போதைய பிரச்சினைகளுக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வு காணும் போது இனப்பரம்பலுக்கும் முக்கிய இடம் அளித்து செயற்பட வேண்டியுள்ளது.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அரசாங்கத்தின் இந்த யோசனைகள் எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் — இப்படி அமைச்சர் பீரிஸ் கூறினார்.

செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் புதிய அரசமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த பின்பே பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறும் என்று கூறினார்.

''மற்றுமொரு கேள்விக்குப் பதில் அளித்த அமைச்சர், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட மக்கள் வடக்குடன் இணைய விருப்பம் தெரிவிக்காது விட்டால் கிழக்கு மாகாணம் தனி அதிகாரப் பிரிவாகச் செயற்படும்'' என்றார்.

இந்த மாதம் 8 ஆம் திகதி நாடாளுமன்ற தெரிவுக் குழுவிடம் இந்த யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அரசியல் கட்சிகள் இது பற்றிய தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

அரசாங்கம் ஏற்கனவே அறிவித்தபடி புதிய அரசமைப்பு சட்ட மூலம் அடுத்த மாத நடுப்பகுதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மங்கள முனசிங்க குழுவின் சிபார்சுகளுக்கும், அரசாங்கம் முன் வைக்கின்ற சிபார்சுகளுக்கும் இடையே தெளிவான வேறுபாடு உள்ளது என்று பீரிஸ் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

### எல்லைகள் மீளமைக்கப்படும்

இலங்கையில் தற்போதுள்ள பிராந்திய எல்லைகள் மீளமைக்கப்பட வேண்டும் என்று திங்கட்கிழமை கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தற்பொழுது நடைமுறையில் உள்ள எல்லைகள் நூற்றுக்கணக்கான வருடங்கள் பழைமை வாய்ந்தவை.

தற்போதைய சமூக மற்றும் ஏனைய காரணிகளை கருத்தில் கொண்டு இதனை மீளமைப்புச் செய்ய வேண்டியுள்ளது.

இதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் — என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

(இ-3-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு தலா 500 ரூபா வழங்கும் திட்டம்

## இந்தியாவில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது

புதுடில்லி, ஒக். 3

மகாத்மா காந்தி அடிகளின் 128 ஆவது பிறந்த தினம் நேற்று இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஐக்கிய முன்னணி அரசின் பல்வேறு நலவாழ்வுத் திட்டங்கள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

புதுடில்லியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் ''சிறுமியர் மேம்பாட்டுத் திட்டத்தை'' பிரதமர் குஜ்ரால் ஆரம்பித்துவைத்தார்.

பிறந்து விட்ட பெண் குழந்தைகள் மீதும், அவர்களைப் பெற்றெடுத்த தாய்மார் மீதும் சமுதாயம் காட்டி வரும் வெறுப்புணர்வைப் போக்கும் வகையில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி கடந்த ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்குப் பின்னர் பிறந்த பெண் குழந்தைகளுக்கும், இனிமேல் பிறக்கப் போகும் பெண் குழந்தைகளுக்கும் தலா 500 ரூபா வழங்கப்படும்.

அத்துடன் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பையும், ஆரோக்கியமான சூழலையும் ஏற்படுத்துவதற்கான ஓராண்டு கால இயக்கம் ஒன்றும் நேற்று ஆம்பித்துவைக்கப்பட்டது.

(ஐ)

# புதுடில்லியில் குண்டு வெடிப்பு

புதுடில்லி, ஒக். 3

அமிர்த சரஸுக்குச்சென்று கொண்டிருந்த பயணிகள் ரயிலின் நான்கு பெட்டிகளில் நேற்று முன்தினம் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. இதனால் இரு பயணிகள் கொல்லப்பட்டனர்; சுமார் 20 பேர் காயமடைந்தனர்.

காஸியாபாத் ரயில் நிலையத்துக்கு அருகே இச் சம்பவம் இடம் பெற்றது.

இதேவேளை — புதுடில்லியின் வட பகுதியில் மத ஊர்வலம் ஒன்றின் போது மூன்று குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் 27 பேர் காயமடைந்தனர். 10 நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து இக் குண்டுகள் வெடித்தன.

(ஐ)

## காட்டுத் தீ அனர்த்தத்துக்கு பொறுப்பேற்கும் அமைச்சர்

தென்கிழக்காசியாவில் பெரும் சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் காட்டுத் தீ அனர்த்தத்துக்கு இந்தோனேசிய அரசாங்க அமைச்சர் ஒருவர் முதற் தடவையாகத் தார்மீகப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்தோனேசிய வனத்துறை அமைச்சர் ஜமாலுதீன் சூர்யோ என்பவரே பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இந்த அனர்த்தத்துக்குப் பொறுப்பேற்றிருக்கிறார்.

காட்டுத் தீ அனர்த்தத்தால் ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று இவர் மீது அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்தது.

தமது எதிர்காலம் குறித்து அதிபர் சுஹார்ட்டோவே தீர்மானிக்க வேண்டும் என்று அமைச்சர் ஜமாலுதீன் கூறியுள்ளார். (ஐ)


கட்டடத் தொழில் நுட்பவியலாளர்களே!
தொழில் நுட்ப மாணவர்களே!

இப்புத்தகம் உங்களுக்காகவே எழுதப்பட்டுள்ளது.

"கொங்கிறீற்றின் முக்கிய தன்மைகளும் அதன் கலவை விதானமும்"

ஆசிரியர்:
கலாநிதி வே. நவரெத்தினராசா

கிடைக்குமிடங்கள்:
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
யாழ்ப்பாணம். [50239]


## உலக அரங்கில்

### ''ஹொட் லைன்'' மூலம் குஜ்ரால் தொடர்பு

புதுடில்லி, ஒக். 3

ஜம்மு காஷ்மீர் பகுதியில் சர்ச்சைக்குரிய எல்லைக் கோட்டுப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலை குறித்து இந்தியப் பிரதமர் ஐ. கே குஜ்ரால் நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான்பிரதமருடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

புதுடில்லியில் இருந்து ''ஹொட் லைன்'' தொலைபேசித் தொடர்பு மூலம் நவாஸ் ஷெரீப்புடன் அவர் தொடர்பு கொண்டார்.

எல்லைப் பகுதியில் நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலில் அப்பாவி இந்திய மக்கள் பலியாகியிருப்பதுகுறித்து பிரதமர் குஜ்ரால் தமது கவலையை பிரதமர் நவாஸ் ஷெரீப்பிடம் அப்போது தெரிவித்தார்.

அண்மையில் நியூயோர்க்கில் சந்தித்த சமயம் எல்லைப் பகுதியில் இடம்பெறும் துப்பாக்கிச் சண்டையை நிறுத்த இரு நாட்டு இராணுவ அதிகாரிகளுக்கும்உத்தர விடுவது என்றுதமக்கிடையே ஒப்புக் கொள்ளப்பட்டதை பிரதமர் குஜ்ரால் நினைவு படுத்தினார்.

(ஐ)

### தலிபான் விமானங்கள் கடும் குண்டு வீச்சு

காபூல், ஒக். 3

எதிர்ப்புக் கூட்டணிப் படைகளின் முக்கிய தளமான மஸாரே ஷெரீப் நகரின் மீது தலிபானின் விமானங்கள் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. நேற்று முன்தினம் மட்டும் மாறிமாறி எட்டுத்தடவைகள் அந்த நகர் மீது குண்டுவீச்சு நடத்தப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் இலக்குகள் மீது தலிபான் படைகள் நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்களை தடுத்து நிறுத்துமாறு தலிபான் எதிர்க் கூட்டணிப்படைகள் ஐ. நா. சபையிடம் கோரியுள்ளன.

(ஐ)

### நேபாள அமைச்சர் ராஜினாமா

காட்மண்டு, ஒக். 3

நேபாள கூட்டரசாங்கத்தின் அமைச்சர்கள் ஐவர் அடுத்தடுத்து ராஜினாமாச் செய்துள்ளனர். நாடாளுமன்றத்தில் பிரதமர் லோகேந்திர பஹதூர் சந்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வரப்படவுள்ள சமயத்தில் இவர்கள் ராஜினாமாச் செய்துள்ளனர்.

தேசிய ஜனநாயகக் கட்சித் தலைவர் சூர்ய பஹதூர் தலாவிற்கு ஆதரவானவர்களே ராஜினாமாச் செய்துள்ளனர். (ஐ)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் கா. சின்னராசா

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர்
திரு. சி. கிருஷ்ணகுமாரின்
அன்புத் தந்தையார்

கா. சின்னராசாவினது அகால மரணத்தை அறிந்து வருந்துகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும், அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ். இந்துக் கல்லூரி.

(50243)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் சின்னப்பொடி சின்னத்தம்பி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. சின்னத்தம்பி தர்மரத்தினம்
அவர்களின் அன்புத் தந்தையார்
சின்னப்பொடி சின்னத்தம்பி

அவர்கள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்,

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா / அத்தியார் இந்துக்கல்லூரி,
நீர்வேலி.

(50240)

## 22 ஆவது நினைவஞ்சலி

மலர்வு: 05 — 08 — 1917



உதிர்வு: 03 — 10 — 1975

### திருமதி மேரி கிருபையம்மா இராஜக்கோன்

முத்தீன்ற சிப்பி எங்கள்
முழுநிலவுத் தாய் தெய்வம்
பத்து மாதம் சுமந்து எம்மை
பாரினிலே வாழ வைத்த
மெழுகுவர்த்தி உருகி ஒளிதந்து
ஆண்டு பல சென்றாலும்
மறப்போமா எங்கள் அன்னை
எம்மை வளர்த்த நினைவுகளை?

அன்புப் பிள்ளைகள்

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

38/9, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.


A/L 98
கணக்கீடு
''கம்பனி''
06 10 97
4.00 -5.00 p.m
Mr. பாலவாசன்
SHAMROCK
(50232)



GRAMMAR CLASSES
COMMENCING ON:
04 — 10 — 1997
Sat. & Sun. 4-30 p.m.
BY: BRITTO
CASIO INSTITUTE
3rd. Mile Post,
Kalviyankadu.
(50247)


## 64 ஆவது பிறந்ததின நினைவு கூரல்



### அமரர் Dr ஆ. இராஜநாயகம்

பிறப்பு: 1933—10—03

இறப்பு: 1996—04—19

பிள்ளைகள் போல் பிறந்த நாள்
கொண்டாட விரும்புவீர்கள்;
எம்மைப் பிரிந்த பின்பும் நாம்
உங்கள் பிறந்த நாளை
நினைவு கூருகின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

(50205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அரியகுட்டி நாகரத்தினம் (குகன்)

உரிமையாளர்:
குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை.

எமது ஆச்சிரமத்தின் கட்டுமானப் பணிக்கு தன்னாலான இயன்ற அளவு நிதி தந்து ஆச்சிரம வளர்ச்சிக்கு ஆதரவு நல்கிய அன்னாரின் மறைவை யொட்டி அவரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் சந்நிதிமுருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுபம், சாந்தி.

**சந்நிதியான் ஆச்சிரமம்**

செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு. (50234)

---

# புலிகளின் பெண் உறுப்பினர் கைது

கொழும்பு, ஒக். 3

இரத்மலானை விமான நிலையத்தைத் தாக்க திட்டமிடப்பட்டிருந்த சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் முன்னணி பெண் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

விமான நிலையத்தைத் தாக்க குண்டுகளையும், வெடிமருந்துகளையும் கொண்டு வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரின் மனைவியான யோகேஸ்வரி என இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் —

வவுனியா நகரில் உள்ள இவரது வீட்டில் வைத்து வவுனியா பாதுகாப்பு இணைப்புப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

---


# விநாயகர் ஸ்ரோர்ஸ்

(எரிபொருள் நிலையத்துக்கு அருகில்)
பிரதான வீதி, நெல்லியடி.



எம்மிடம் தரமான ஓடுகள், சிமெந்து, கம்பிவகைகள், பலவடிவான கிறில் கற்கள், கொங்கிறீற் கற்கள், படிவடிவிலான பூச்சாடிகள் என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**

(எரிபொருள் நிலையத்துக்கு அருகில்)
பிரதான வீதி, நெல்லியடி.

(சி/1670)


---

## யா/ அராலி இந்துக் கல்லூரியில்

20 வருடங்களாக ஆசிரியராகவும், 8 வருடம் அதிபராகவும் நற்பணியாற்றி இளைப்பாறிய

**திரு. நா. ச. செல்வராசா**
அவர்களின்

**சேவை நலம் பாராட்டு விழாவும்**

பொன்னாடை போர்த்தி கௌரவித்தலும் புதிய அதிபராகப் பதவியேற்றுள்ள

**திரு. ம. மகாதேவா**
அவர்களின்

**வரவேற்பு வைபவமும்**

தலைவர்:- வைத்தியகலாநிதி
**திரு. செ. பரமசிவம்பிள்ளை**
(அரசினர் சித்த போதனாவைத்தியசாலை, கைதடி)
(செயலாளர் பா. அ. சங்கம்)

இடம்:- கல்லூரி மண்டபம்
காலம்:- 04 - 10 - 97 சனிக்கிழமை
1 - 00 மணி (S. L. T)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாணவர்கள், பெற்றோர்கள்,
நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. (50220)

---

# வாழ்த்துகின்றோம்

## யா/ தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்

கல்விச் சேவையில் பெரும் பணி ஆற்றிவரும் இப் பாடசாலையின் அதிபரையும், ஆசிரியர்களையும் அவர்களது சேவை மேலும் சிறக்க பல்லாண்டுகள் வாழ்கவென உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வாழ்த்துவதுடன், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

### கோட்டமட்டம்

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு - 4 | தையல் | தி. செல்வக்குமார் | 1 ஆம் இடம் |
| ஆண்டு - 6 | தையல் | வி. மணிவண்ணன் | 1 ஆம் இடம் |
| ஆண்டு - 7 | தையல் | மா. சிவனேஸ்வரன் | 1 ஆம் இடம் |
| ஆண்டு - 8 | தையல் | தி. விக்கினராசா | 1 ஆம் இடம் |
| ஆண்டு - 9 | தையல் | தி. ஜெயவதனி | 1 ஆம் இடம் |
| ஆண்டு . 3 | தையல் | கு. துஜித்தா | 2 ஆம் இடம் |
| ஆண்டு - 9 | கோலம் | தி. சசிகலா | 3 ஆம் இடம் |
| ஆண்டு - 10 | கோலம் | இ. துஷ்யந்தி | 3 ஆம் இடம் |
| பிரிவு - 2 | தனிஇசை | சி. பிரபாலினி | 1 ஆம் இடம் |
| பிரிவு - 3 | பாஓதல் | கு. கஜந்தி | 2 ஆம் இடம் |

### விளையாட்டுப் போட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| 15 வயது | உயரம் பாய்தல் | தெ. லவன் | 1 ஆம் இடம் |
| 15 வயது | 100 மீ. ஓட்டம் | ந. சாந்தகுமார் | 2 ஆம் இடம் சிறந்த விளையாட்டு வீரன் |
| 15 வயது | 200 மீ. ஓட்டம் | ந. சாந்தகுமார் | 2 ஆம் இடம் சிறந்த விளையாட்டு வீரன் |
| 15 வயது | குண்டெறிதல் | ந. சாந்தகுமார் | 2 ஆம் இடம் சிறந்த விளையாட்டு வீரன் |
| 17 வயது | குண்டெறிதல் | கு. ஸ்ரீதேவி | 2 ஆம் இடம் |
| 19 வயது | 1500 மீ. ஓட்டம் | தி. கஜரூபன் | 2 ஆம் இடம் |
| 19 வயது | குண்டெறிதல் | தி. கஜரூபன் | 3 ஆம் இடம் |
| 19 வயது | உயரம் பாய்தல் | த. தர்சன் | 2 ஆம் இடம் |
| 19 வயது | 1500 மீ. ஓட்டம் | சி. செந்தில்நாதன் | 3 ஆம் இடம் |
| 19 வயது | 400 மீ. ஓட்டம் | சி. செந்தில்நாதன் | 3 ஆம் இடம் |
| 17 வயது | வலைப்பநதாட்டம் | | 3 ஆம் இடம் |
| 19 வயது | வலைப்பந்தாட்டம் | | 3 ஆம் இடம் |
| 15 வயது | உடற்பயிற்சி | (ஆண்கள்) | 3 ஆம் இடம் |
| 15 வயது | உதைபந்தாட்டம் | | 2 ஆம் இடம் |
| 19 வயது | உதைபந்தாட்டம் | | 2 ஆம் இடம் |
| ஆண்டு - 11 | விவசாய அறிவுப் போட்டி | ஐ சசிகரன் | 1 ஆம் இடம் |
| ஆண்டு - 11 | விவசாய அறிவுப் போட்டி | யோ. குமரகுருபரன் | 2 ஆம் இடம் |
| ஆண்டு - 10 | விவசாய அறிவுப் போட்டி | சி. பிரதீபன் | 3 ஆம் இடம் |
| ஆண்டு - 11 | வர்த்தக வினாடிவினாப் போட்டி | (பரு + மரு) | 4 ஆம் இடம் |
| ஆண்டு - 11 | மாணவர் நிலை | பா. நிஷாந்தி | 4 ஆம் இடம் |
| ஆண்டு - 10 | கட்புல சாதனம் | சு. ஜீவநாத் | கோட்டமட்டத் தெரிவு |
| Year - 6 | Hand Writing | R. Thayanandaruby | 1st Place |
| year - 6 | Hand Writing | R. Jeyasuganthy | 3rd Place |
| Yeer - 7 | Recitation | T. Sharmila | 2nd Place |
| Year - 9 | Recitation | T. Sasikala | 1st place |
| Yeer - 10 | Dictation | S. Kalaivani | 1st Place |
| Yesr - 10 | Dictation | K. Kajanthy | 3rd Place |
| Year - 9 | Dictation | T. Sasilkala | 1st Place |
| Year - 11 | Oratory | B. Nishanthy | 3rd Place |

### வலய மட்டம்

| | | | |
|---|---|---|---|
| 15 வயது | உயரம் பாய்தல் | தெ. லவன் | 2 ஆம் இடம் |
| பிரிவு - 2 | தனி இசை | சி. பிரபாலினி | 3 ஆம் இடம் |
| Year - 6 | Hand writing | R. Thayanadaruby | 1st Place |

மாணவர்கள், பழைய மாணவர் சங்கம்,
பெற்றோர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்.

(சி/ 1675)

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி செலுத்தும் வழிபாடும்



மண்ணுலக வாழ்வு: 27 — 11 — 1954

விண்ணுலக வாழ்வு: 25 — 08 — 1997

## அருட்திரு. இன்னாசி அருள்பாலன்

(தென்னிந்திய திருச்சபை ஊழியன்)

''கர்த்தருக்குள் மரிக்கின்றவர்கள் பாக்கியவான்கள்''

அன்பின் ஒளி விளக்கே!
அணையாத தீபமெனத் திரிபோட்டுக்
காத்திருந்தோம்!
இடையில் வந்த இடமாற்றம்
உங்களது இவ்வுலக வாழ்விற்கு
முடிவானதோ!

உங்கள் ஆன்ம இளைப்பாற்றுக்கான நன்றி செலுத்தும் வழிபாடு 04 - 10 - 1997 சனிக்கிழமை (புதிய நேரம்) 3. 30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் மேற்படி இவ் வழிபாட்டில் உற்றார், உறவினர், நண்பர்கள், போதகர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைகின்றோம்.

இங்ஙனம்.
திருமதி சத்தியர் அருள்பாலன்
(மனைவி)

இராமலிங்கம் வீதி,
உடுவில். (சி/1676)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச நூலகம்

# மேலும் 100 முறைப்பாட்டாளர் விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

வடக்கு - கிழக்கில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழு எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் மீண்டும் தனது விசாரணைகளை பலாலியில் ஆரம்பிக்க உள்ளது.

இந்த விசாரணைக்குழு முன் இதுவரை விசாரணைக்கு சமுகமளிக்காத அனைவருக்கும் இம்முறை விசாரணைக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது

அத்துடன் கடந்த 01.01.95-க்குப் பின்னர் காணாமற்போயுள்ளோர் தொடர்பாக இதுவரை முறைப்பாடு எதனையும் செய்யாமல் உள்ளவர்களுக்கும் விசாரணைக்குழு சமுகமளிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு இதுவரை முறைப்பாடு பதிவு செய்யாமல் இருப்போரை உடனடியாகத் தத்தமது விபரங்களுடனும், சாட்சிகள் எவரேனும் இருந்தால் அவர்களது பெயர், அடையாள அட்டை இலக்கம் போன்ற விவரங்களுடனும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். செயலகத்தில் சமுகமளித்து பதிவு செய்து கொள்ளுமாறு அறிவித்துள்ளது.

விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ள காணாமற்போனோரின் பெயர் விவரங்களை யாழ். செயலகம் வெளியிட்டுள்ளது. அவர்களில் 100 பேரின் விவரங்கள் நேற்றைய உதயனில் பிரசுரமாகி இருந்தன. மேலும் 100 பேரின் விவரங்கள் இன்று பிரசுரமாகின்றன.

காணாமற்போனோரில் சிலரின் முகவரி இல்லாததால் அவர்கள் கைது செய்யப்பட்ட அல்லது காணாமற்போன இடம் அவர்களின் பெயருக்கு அருகே குறிப்பிடப்பட்டுள்ளது.

தில்லையம்பலன் யசோதரன் (சுகிர்தவாசா, கும்பளவளை, அளவெட்டி), திருஞானசம்பந்தர் அஸிஸ்பபா (16/5, சீனியர் லேன், வண்ணார்பண்ணை), திருவள்ளுவர் செழியன் (நல்லூர் கோயில்), துரை மகாலிங்கம் (கொடிகாமம்), உதயகுமார் சண்முகநாதன் (97, மலர்மகள் வீதி, அரியாலை), வி. பஜினோல்ட் குலசேகரம் (15ஏ, ராஜசிங்கம் வீதி, குருநகர்), விஜயகுமார் சுதாமலர் (நுணாவில் கோயில், சாவகச்சேரி), விஜயராணி யோகராஜா (31, எழிலூர், கொழும்புத்துறை), விஜயகாந்தன் சின்னத்துரை (141, சென். சேவியர் வீதி, கொழும்புத்துறை), விநாசித்தம்பி கோணேஸ்வரன் (அரியாலை).

யோர்கராஜா யோகராணி (சுன்னாகம்), திருமதி யோகராஜா (அச்சுவேலி), யோகநந்தன் (50/18, செட்டித் தெரு, நல்லூர்), அருளானந்தன் சார்ள்ஸ் (50/3, இராசலிங்கம் வீதி, யாழ்.), பிரான்ஸிஸ் உடின் பெனாஸியஸ் (7/4, மத்தியூஸ் வீதி, குருநகர்), குமாரசுவாமி சந்திரகுமார் (புத்தூர் கிழக்கு), குணராசா கமலேஸ்வரன் (கலைவாணி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு), கதிரவேலு யோகேஸ்வரன் (தவசிகுளம், கொடிகாமம்).

மகாலிங்கம் ரவீந்திரன் (சூசையப்பர் கோயிலடி, கோப்பாய்), முத்தையா சிவகுமார் (செல்வாவீதி, சுதுமலை தெற்கு), பசுபதி தவராஜா (வல்வெட்டித்துறை), செல்வகுமார் சதீஸ்குமார் (வைத்தியசாலை அருகில் கோப்பாய் மத்தி), சின்னத்தம்பி செல்வராஜா (சுன்னாகம்), சண்முகம் சற்குணராஜா (சுழிபுரம் தெற்கு).

சண்முகானந்தன் மோகனரூபன் (நீர்வேலி தெற்கு), சின்னத்துரை ராஜன் (நுணாவில், சாவகச்சேரி), தனபாலன் ஸ்ரீஸ்கந்தராஜா (மந்துவில் தெற்கு, சாவகச்சேரி), தம்பு மகேந்திரன் (புலோலி மேற்கு), வைத்தியலிங்கம் தங்கமுத்து (ஸ்ரேசன் வீதி, கொக்குவில் கிழக்கு), குலசிங்கம் விஜயகுமார் (கரம்பைக்குறிச்சி, வரணி), குணரட்ணம் விக்கினராஜா (புலோலி மேற்கு. பருத்தித்துறை, அமுதலிங்கம் யோகேந்திரன் (அராலி கிழக்கு)

ரி. அம்பிகைபாகன் (ஏழாலை), சுப்பிரமணியம் அர்ஜுனன் (கோயிலாக்கண்டி மேற்கு), ஏ. கேதாரகௌரி (கைதடி), ஏ. ஸ்ரீகரன் (மட்டுவில் வடக்கு), ஸி. பாலசிங்கம் (கைதடி, நுணாவில்), டி. சுரேஸ்குமார் (16/6, மத்தியவீதி, யாழ்.), கே. ரவீந்திரன் (28, கோயிலாக்கண்டி), கே. சத்தியகுமார் (26, கலைமகள் வீதி, அரியாலை).

கே. தவனேசன் (தனங்களப்பு), கே. உதயபாஸ்கரன் (சாவகச்சேரி வடக்கு), கந்தன் சுகததாஸ் (கோப்பாய் வடக்கு), கந்தசுவாமி அன்பழகன் (கச்சாய் வீதி, சாவகச்சேரி), கந்தையா புஸ்பராஜா (கோயிலாக்கண்டி), எல். விஜயகுமார் (சரவணை கிழக்கு), என். ஜெயகாந்தன் (கல்வயல்), என். சதீஸ்வரன் (கோயிலாக்கண்டி மேற்கு), என். தங்கராஜா (கோயிலாக்கண்டி).

பி. மகேந்திரன் (21/5, வைமன் வீதி, யாழ்.). பஞ்சாட்சரன் சத்தியசீலன் (கொடிகாமம்), பொன்னையா தர்மலிங்கம் (புதிய வீடமைப்புத் திட்டம், மிருசுவில்), பூரணானந்தன் செல்வகுமார் (அம்மன் கோயிலடி மேற்கு, தச்சன்தோப்பு), எஸ். பாலகுமார் (கட்டைப்பிராய்), எஸ். நிரோன் ஜிராட் (215, 6, இராசாவின தோட்டம்), எஸ். பேரின்பநாதன் (நாவற்குழி மேற்கு), எஸ். பிவதிரி (ஏழாலை மேற்கு), எஸ். ராஜதேவன் (9/9, மத்திய வீதி, குருநகர்), எஸ். தராரூபன் (கோப்பாய் தெற்கு).

எஸ். சற்குணராஜா (அல்லாரை தெற்கு, மீசாலை), சற்குணராஜா பாலசுப்பிரமணியம் (கைதடி மத்தி), எஸ். தயாபரன் (கொக்குவில்), எஸ். தேவபாலன் (கண்டி வீதி, அரியாலை), எஸ். செல்வராசா (நகுலேஸ்வரன் வீதி, கீரிமலை), சண்முகநாதன் வைத்தியநாதன் (லிங்க பிள்ளையார் கோயில், இருபாலை கிழக்கு), சின்னராஜா விஜயகோபால் (சித்தன்கேணி), சின்னத்தம்பி விக்னராஜா (கோயில் குடியிருப்பு, சாவகச்சேரி), ரி. சுவந்தராஜா (நாவற்குழி)

ரி. தர்மவாசகர் (10, கலைமகள் வீதி, அரியாலை), ரி. வரதராசா (கிருஸ்ணன் கோவிலடி, உரும்பிராய்), ரி. எஸ். ஜேம்ஸ் ஸிரஹோஸ் (17, தேசிய வீடமைப்புத் திட்டம், குருநகர்), தங்கவேலு பிறேமநாதன் (சுன்னாகம்), திருச்செல்வம் விஜயசந்திரன் (பிறவுண் வீதி, கொக்குவில்), வி. சத்தியதாசன் (மீசாலை கிழக்கு), சதீஸ்வரன் (திருநெல்வேலி),

ஐ. பரமநாதன் (12, செம்மணி வீதி, அரியாலை), எம். றங்கநாதன் (சப்பச்சி மாவடி, சாவகச்சேரி), சூசைப்பிள்ளை அன்ரனிப்பிள்ளை (13, நியூ பார்க் றோட், குருநகர்), சபாபதி நடராஜா (நுணாவில் கிழக்கு), சபாரட்ணம் நமேஸ்வரன் (வல்வெட்டித்துறை), கே. கமலக்கண்ணன் (கைதடி), நாகராஜா நகுலேசன் (சாவற்காடு, சுதுமலை) (ஐ 5-9)

## நவராத்திரிக் கலைவிழா

வடமராட்சி, ஒக்.3

யாழ். கல்வித்திணைக்கள வலயம் ஒன்றின் நலன்புரிக் கழகம் நடத்தும் நவராத்திரிக் கலைவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரிமண்டபத்தில் கழகத் தலைவர் செ. மற்றாஸ்மெயில் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ் பல்கலைக் கழகப் பதிவாளர் கலாநிதி க. குணராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

மங்கள இசை, இசைக்கச்சேரி, நாட்டுக்கூத்து, தனிநடனம், நாட்டிய நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(ஐ-173)

# நவராத்திரியில் ஸ்ரீ சக்கர பூசையும் சதசபிண்டீ யக்ஞமும் பேறு தரும்

அம்பிகைக்குரிய தேவி தினங்களுள் நவராத்திரி தலை சிறந்ததாகும். சரத்காலமாகிய புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் வரும் நவராத்திரி சாரதா நவராத்திரி எனவும், சாந்திராயண வருஷப் பிறப்பின் போது பங்குனி மாதத்து அமாவாசையை அடுத்து பிரதமை தொடங்கி ஒன்பது நாள்கள் நடைபெறும் நவராத்திரி விழா வசந்த நவராத்திரி எனவும் கொள்ளப்படும்.

## நவராத்திரிக் காலம் இது

இவ்விரண்டு நவராத்திரி விழாக்களும் இலங்கையில் இணையில்லாத ஈஸ்வரங்களுள் மிகப் பழைமையான முன்னேஸ்வரத்தில் தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்றன. முன்னேஸ்வரம் குமாரசாமிக் குருக்கள், சோமாஸ்கந்தக் குருக்கள், பாலசுப்பிரமணியக் குருக்கள் இத்தலத்தின் பிரதமகுருமாராகவும், தர்மகர்த்தாக்களாகவும் விளங்கி அம்பிகை வழிபாட்டினை இத்தலத்தில் மட்டுமன்றி ஈழமெங்கும் ஆற்றுப்படுத்திய பெருமக்களாவார்கள்.

இம்மரபில் வந்த பேராசிரியர் கைலாசநாதக்குருக்களினால் முன்னேஸ்வரத்தில் வசந்த நவராத்திரி விழாவில் 1976இல் சண்டீயக்ஞம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இலங்கையில் வசந்த நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வரும் சிவாலயம் இது ஒன்றேயாகும்.

### நல்லூரில்

பேராசிரியரின் தந்தையார் கார்த்திகேயக் குருக்களினால் நல்லூரில் ஸ்தாபிக்கப்பட்ட சிவாலயத்திலும் தொன்றுதொட்டு சாரதா நவராத்திரிவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலிலும் அறுபது ஆண்டுகளுக்குப் பின் 1988இல் நடைபெற்ற குடமுழுக்கினைத் தொடர்ந்து சாரதா நவராத்திரி காலத்தில் சண்டீஹோமமும் பேராசிரியர் அவர்களினால் தொடக்கி வைக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நவராத்திரி தினங்களில் துர்க்கை, லக்ஷ்மி சரஸ்வதி ஆகிய முப்பெரும் சக்திகளையும் வழிபடுவர். அம்பிகை இம்மூவரையும் உள்ளடக்கி இவர்களுக்கப்பாற்பட்ட நான்காவது நிலையினளாகிய பராசக்தியாவாள். சண்டிகா பரமேஸ்வரி என்பது இவளுடைய திருநாமம். கல்வி, செல்வம், வீரம் ஆகிய முப்பெரும் பேறுகளையும் நமக்கு வேண்டிய யாவற்றையும் தரும்வழிபாடு இதுவாகும்.

எல்லாம் வல்ல அம்பிகையை நாம் உபாசிக்கும்

**ஞானக் கதிர்**

வழிகள் பலவுள. அவற்றுள் வேத சிவாகமங்கள் கூறும் வழிகள் இரண்டு. வைதிக மரபை ஒட்டிக் கிரியா காண்டம் வகுக்கும் தந்திர சாஸ்திரங்கள் கூறும் வழி இன்னொன்று.

### அக்னியில் சக்தி

வைதிக மரபில் வெளிப்படும் அம்பிகை அக்னியில் ஆவிர்பவித்து அடியார்கள் வழங்கும் ஆகுதிகளை ஏற்றருளி அனுக்கிரகம் புரிகிறாள். அஷ்டமூர்த்தி வடிவினளான இறைவன் திருவுருவில் எட்டு உறுப்புக்களில் ஒன்றான அக்னியில் அவளுக்கு நாம் சமர்ப்பிக்கும் பொருள்களைக் கொடுத்தல் மரபாகும்.

துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி மூவரும் இணையப் பேருருத் தாங்கி நிற்கும் சண்டிகை என்பாளை அக்னியில் வழிபடும் போது நிகழ்வது சண்டீயக்ஞம் எனப்படும்.

ஆகம மரபிற்கமைய பிரதிட்டிக்கப் பெற்றிருக்கும் திருவுருவில் சான்னித்தியமான அன்னையை அர்ச்சிப்பவர், நீராட்டி, புத்தாடை புனைந்து, அழகுமிகு அணிகலன்கள் அணிவித்து, அறுபத்துநான்கு உபசாரங்களையும் சமர்ப்பிக்க மனங்கனிந்து ஏற்றுத் திருவருள் பாலிப்பாள்.

### ஸ்ரீ சக்கர பூசை

தாந்திரீக வழிபாட்டு நெறியில் அம்பிகையை ஸ்ரீ சக்கரம் என்ற யந்திரத்தில், நடுவில் பிந்துவில் எழுந்தருளிவித்து, பரிவாரங்கள் தனித்தனி ஆவரணங்களாக ஏனைய கோணங்களில் அம்பிகையை நோக்கிய வண்ணம் அமர்ந்திருப்பதாகப் பாவனை செய்து வழிபடுவது ஸ்ரீ சக்கர பூசையாகும்.

சக்திபரமான தந்திர சாஸ்திரங்கள் கூறும் வழிபாடுகளில் சிவபெருமானுக்கு உயர்ந்த இடமுண்டு.

நான்கு சிவசக்கரங்கள் ஐந்து சக்திசக்கர நால்கள் ஆக ஒன்பது சக்கரங்களினால் ஏற்பட்டதான ஸ்ரீ சக்கரமானது சிவசக்திகளின் சரீரம் ஆகும். பராசக்தி திரிகோணவடிவினள் எனவும், பரசிவன் பிந்துவடிவினன் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ சக்கரத்தின் பிந்து [illegible] மத்தியில் காமேஸ்வரியான

(7 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர் உளநலம் - 03

## அறிகையும் அறிவு விருத்தியும்

★ அறிகைத் தொழிற்பாடு அறிவு விருத்திக்கு உதவுகிறது.

★ குழந்தை, உலகையும் தன்னையும் காரணகாரியத் தொடர்போடு புரிந்து கொள்வதனூடாகவே தனது அறிவுமட்டத்தை மேம்படுத்திக் கொள்கிறது.

★ உயிருள்ளன, உயிரற்றன, சமூகம், பண்பாடு என்பவற்றோடு பிள்ளை கொள்ளும் ஊடாட்டம், அதன் சிந்தனையின் உள்ளடக்கத்தைத்தீர்மானிக்கின்றது.

★ ஒவ்வொரு கட்டத்திற்குமுரிய அறிவு மட்டமே பிள்ளையின் மனவெழுச்சி சார்ந்த அனுபவங்களையும், சமூகம் சார்ந்த அனுபவங்களையும் நிர்ணயிக்கின்ற பிரதான காரணியாக அமைகிறது.

★ பிள்ளையின் அறிகை வளர்ச்சியானது, முதலில் பொருள்களின் பௌதிகப் பண்புகளோடு ஏற்படும் நேரடியான தொடர்புகளால் மட்டுமே ஏற்படக் கூடியதாக அமைகிறது என்பதையும், அதனை அடுத்தே அப்பொருள்களைக் குறிக்கும் பல்வேறு குறியீடுகள் மூலம் அறிகை ஏற்பட முடியும் என்பதையும், இதனை அடுத்தே கருத்துருவப் பாங்கான எண்ணக்கருக்களின் அறிகை ஏற்பட முடியும் என்பதையும் கருத்திற் கொள்வது அவசியம்.

★ ஆரம்ப கட்டத்தில் பௌதிகப் பொருள்களுடனான ஊடாட்டத்திற்கு உதவும் சூழலை ஏற்படுத்தாது விடுதலும், பின்னர் கருத்துருவப் பாங்கான பதங்களை அறிமுகப்படுத்தாது விடுதலும் பிள்ளை அறிகையின் இறுதி இலக்கை அடைவதை மட்டுப்படுத்துகிறது.



ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரும் உலக உளநல நாளை ஒட்டி இக்குறிப்பு பிரசுரமாகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஜோர்ச்ஸ்ரனிஸ்லோஸ்ஆகிய எனது விசேட அடையாள அட்டை (இல.0905017446) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் A.E. பீரிஸ் நிர்வாசப்பகுதி, போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

[சி/1673]

திரு. ஞானச்சந்திரன் ஆத்தியடி பருத்தித்துறை என்பவரது டயறி 30-09-97 அன்று காலை வடஇந்து மகளிர் கல்லூரிக்கும், பஸ் தரிப்பு நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தி. தங்கராசா (கங்கப்பழம்), தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். [50225]

### மணமகள் தேவை

பட்டதாரி 28 வயது, சிவில் என்ஜினியர் 32 வயது மணமக்களுக்கு பட்டதாரி மணமகள் தேவை. அப்பால் திருமணசேவை, ஸ்ரீ லங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். [50230]

### காணி விற்பனைக்குண்டு

சுன்னாகம் இலங்கை வங்கிக்கு அருகில் உள்ள கே.கே. எஸ் வீதியின் கிழக்கே 3½ பரப்புக்காணி கிணற்றுப்பங்குடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: வே. நாகராசா, சுவர்ணாபேக்கரி, பெரிய மதவடி, சுன்னாகம்.

[47449]

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த நல் இன தென்னம் நாற்றுக்கள் செவ்விளை, வத்தாவி, மாலைதீவு, சாதாரணம் குறுகிய காலத்தில் பலன் தரக் கூடியவை விற்பனைக்குண்டு. தொடர்பு:- மு. காங்கேசு, ஐயாகடையடி, கண்டி வீதி, மீசாலை.

[50101]

### மகாத்மா காந்தி

''நம்முடைய ஆசைகளைக் குறைத்துக் கொண்டு ஏழைகளுக்கு ஓரளவுக்கு மிஞ்சும்படி செய்வது நமதுகடமை.'' மில்க்வைற் சோப்/ சலவைத்தூள் வெற்று உறைகள் 5-க்கு ''படிப்பிணை'', காந்தி படம், மரம், 'மில்க்வைற்' செய்தி.

[சி/1677]

## கண்காட்சி

வடமராட்சி,ஒக். 3

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கான போஷாக்கு வார கண்காட்சியும், நிகழ்வுகளும் மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரைவேற்பிள்ளை பிரதம விருந்தினராகவும் பருத்தித்துறைக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம், பருத்தித்துறை கால்நடை வைத்தியஅதிகாரி திருமதி பு. தங்கராசாஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ-173)


**A/L 98**

**பங்குடமை**

ஆசிரியர்:
**D. SAM**

ஆரம்பம்:- **04 - 10 - 97**
சனி காலை 10 மணிக்கு

**D. M. I.**
**233, Stanley Road,**
**Jaffna.**

(சி/1648)



## உலக ஆசிரிய தினவிழா

### ஒக்ரோபர் 06

### யா/வடமராட்சி மத்தியமகளிர் கல்லூரி

மேற்படி கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் 06-10 1997 காலை 9 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் விழாவில் கலந்து ஆசிரியர்களைக் கௌரவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(50241)



## யா/ கல்வித்திணைக்கள வலயம் 1 இன் நலன்புரி கழகத்தின்

# நவராத்திரி கலை விழா

**தலைவர்: திரு. செல்லையா மெற்றாஸ்மயில்**
(கழகத் தலைவர்)

**பிரதம விருந்தினர்: உயர்திரு. க. சண்முகநாதன்**
அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

**கௌரவ விருந்தினர்: கலாநிதி க. குணராஜா**
பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்

**இடம்: யாழ். இந்து மகளிர் கல்லூரி**
**காலம்: 1997 - 10 - 05 ஞாயிற்றுக்கிழமை**
மு. ப. 9-30 (இ. நே.)

### நிகழ்ச்சி நிரல்;

மு. ப. 9-30 மங்கள விளக்கேற்றல், ''வாணி வாழ்த்து''
9-35 வரவேற்புரை திரு. D. R அருமைநாயகம்
கழக உபதலைவர்
9-40 மங்கள இசை திரு பி. எஸ். பிச்சையப்பா குழுவினர், நல்லூர்
10-05 நற்சிந்தனை திரு. ஆறு. திருமுருகன்
ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக்கல்லூரி
10-15 கதகளி தனிநடனம் ''தமிழ் வணக்கம்''
கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் நா. கஜேந்திரா
தயாரித்து வழங்குபவர்! நடன ஆசிரியை
திருமதி பத்மினி செல்வேந்திரகுமார்
10-30 இசைக்கச்சேரி;
நயினை - மகாவித்தியாலய இசையாசிரியர்
திரு. தி. கருணாகரன்
11-00 நாட்டுக்கூத்து:
சென் றோச். றோ. க. மாணவர்கள் வழங்கும் ''மனுநீதிகண்ட சோழன்''
11-30 தனிநடனம்,
யா/ இராமநாதன் கல்லூரி மாணவி செல்வி சோபனா நந்தகுமார்
தயாரித்து வழங்கும் பரதகலாநிவேத திருமதி நந்தினி சிவராஜா
11-45 நாட்டுக்கூத்து:
யா/ புனித மரியாள் வித்தியாலய மாணவர் வழங்கும்
''அரிச்சந்திர மயானகாண்டம்''
12-15 தலைமையுரை
பிரதம விருந்தினர் உரை,
கௌரவ விருந்தினர் உரை,
சிறப்புரை உயர்திரு சு. இரத்தினராசா
கல்விப்பணிப்பாளரும், கழக போஷகரும்
12-45 நாட்டிய நாடகம்:
இராமநாதன் கல்லூரி மாணவிகள் வழங்கும்
''அரிச்சந்திர மயானகாண்டம்''
தயாரித்து வழங்குபவர் பரதகலாநிவேத திருமதி நந்தினி சிவராஜா
1-30 நன்றியுரை.

**தவறாது உரிய நேரத்துக்கு சமுகமளித்து ஆசனத்துக்கு முந்துங்கள்!**

**பிரவேசம் இலவசம்** **நலன்புரி கழகம்**

விளம்பர அன்பளிப்பு:

**திரு. ஆர். இராசநாயகம்**

சிறந்த சிற்றுண்டி வகைகள், கேக், மற்றும் குளிர் பானங்களைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்:

**கிரியோன் கூல்பார்**

யூனியன் முன்பாக,
கண்டி வீதி,
சாவகச்சேரி

[illegible]
சாவகச்சேரி.

(50236)



## யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

**பழைய மாணவர் சங்கமும், பாடசாலை நாடக மன்றமும்**
இணைந்து வழங்கும்

# நாடக விழா

திகதி: **03-10-97** பி. ப. 1 மணி
(மாணவர்களுக்கான நிகழ்வு)
**04-10-97** மு. ப. 10 மணி
(பெரியோர்களுக்கான நிகழ்வு)

இடம்: சபாரட்ணம் கலை அரங்கம்

தலைவர்: திருமதி ச யோகேஸ்வரன்
அதிபர்

**03-10-1997**
பிரதம விருந்தினர்;
திரு. இ வசந்தசேனன் அவர்கள்
(பழைய மாணவன், பிரபல சட்டத்தரணி, மானிப்பாய்)
கௌரவ விருந்தினர்:
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
(தலைவர், துர்க்கா தேவஸ்தானம், தெல்லிப்பழை)

**04 - 10 - 1997**
பிரதம விருந்தினர்:
திருமதி றெஜினா இருதயநாதன் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம்)
கௌரவ விருந்தினர்:
நாடக கலா வித்தகர்
திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்
(அதிபர், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம்)

### ★ நிகழ்ச்சி நிரல் ★

▼ மங்கள விளக்கேற்றல்
▼ தமிழ்த்தாய் வாழ்த்து
▼ வரவேற்புரை:
**03-10-1997** செல்வி சிவயோகவதனி சிற்றம்பலம்
(ஆலோசகர், நாடக மன்றம்)
**04-10-1997** திருமதி வி. ஜே. பை மூர்த்தி
(ஆலோசகர், நாடக மன்றம்)
▼ தலைமையுரை — அதிபர்
▼ பிரதம விருந்தினர் உரை
▼ கௌர விருந்தினர் உரை
▼ மன்றத்தை வாழ்த்தி - திரு. சொ. ஜெயவீரசிங்கம்
(ஆசிரியர் 03-10-97)
திரு. சி. சண்முகநாதன்
(உப அதிபர், 04-10-97)
திரு. நா. பாலகிருஷ்ணன்
(ஆசிரியர் 04-10-97)

**ஒற்றுமையின் வெற்றி-சிறுவர் நாடகம்**
(பாடசாலை மாணவர்கள்)

**கலையாத ஓவியம் - சமூக நாடகம்**
(ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து வழங்கல்)

சிறப்பு நிகழ்ச்சி:
**அரிச்சந்திரா - நாட்டிய நாடகம்**
(யா/ இராமநாதன் கல்லூரி மாணவிகள்)
1997 வடகிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம்)
தயாரிப்பு — நட்டுவாங்கம் —
திருமதி நந்தினி சிவராஜன் (நடன ஆசிரியை)

**அப்பரும் அப்பூதியும் புராண நாடகம்**
(மெமோறியல் மாணவர்கள்)
(1997 வடகிழக்கு மாகாண தமிழ்தினப் போட்டியில் வெற்றி பெற்ற நாடகம்)
நெறியாள்கை: திரு. சி. சிவராஜன்

★ நன்றியுரை:
**03-10-1997** திரு. இ. இராஜயோகன்
(செயலாளர், பழைய மாணவர் சங்கம்)
**04-10-1997** திரு. சி. சிவராஜன்
(பொறுப்பாசிரியர், நாடகமும், அரங்கியலும்)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

பழைய மாணவர் சங்கம்
மெமோறியல் நாடக மன்றம்

**நுழைவுச் சீட்டு:**
03 - 10 - 97 மாணவர்களுக்கு 10/-
04-10-97 பெரியோர்களுக்கு 50/-, 100/, 500/-

(50198)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நல்லொழுக்கம் நெருக்கடி நிலையில்!

உலகளாவிய முறையில் நல்லொழுக்க நாள் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

நல்லொழுக்கத்தின் அவசியமும் தேவையும் இன்று நேற்று உண்டாகியவை அல்ல. மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே அதன் தேவை உணரப்பட்டது.

வாழ்க்கையை எப்படியும் வாழலாம் என்றில்லாது, இப்படித்தான் வாழ வேண்டும் என்று வகுக்கப்பட்ட வரன் முறைகளில் நல்லொழுக்கமும் ஒன்று.

ஒழுக்கம் குறைந்தவர்களை தீய ஒழுக்கமுடையாரை மதிக்காது புறக்கணித்துத் தூரத்தே வைக்கும் வழக்கம் சமூக மரபாகியதனை மறந்து விடுவதற்கில்லை. ஒழுக்கம் விழுப்பம் தரும் நெறியாகக் கொள்ளப்பட்டது.

தீய ஒழுக்கங்கள் எவை, நல்லொழுக்கங்கள் எவை என அறவோர் வகுத்துக் கொண்டனர். சமூகத்துக்குப் பங்கம் விளைவிக்கும் தீய ஒழுக்கங்கள் தண்டனைக்குரிய குற்றங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

தனிப்பட்டவரின் உடலைக் கெடுத்து, உயிருக்கு ஆபத்துத் தரக்கூடிய பழக்க வழக்கங்கள் பலவும் இன்னும் தண்டனைக்குரிய குற்றங்களாக வகுக்கப்படவில்லை. மது அருந்துதல், புகை பிடித்தல், போதைப் பொருள் உட்கொள்ளுதல் ஆகியன தனிப்பட்ட ஒருவரின் சுயவிருப்பின் பாற்பட்டவை எனக்கருதப்படுகிறது.

இந்த நிலை நீக்கப்படும் வரை, நீங்கும் வரை சொந்த விருப்பத்தின் பேரில் ஒருவர் மது அருந்துவதையோ, புகை பிடிப்பதையோ மற்றும் புதிய வகைப் போதைப் பொருள்களுக்கு அடிமை ஆவதனையோ தடுப்பது கடினமே.

இவற்றையும் ஏனைய தீய பழக்கங்களையும் பிள்ளைகள் — மாணவர்கள் — இளவயதில் பழகிக் கொள்ளாமல் தடுப்பது ஒன்றேமாற்றுவழியாகஉள்ளது

பெற்றோர்களும் ஆசிரியர்களும் இளையோரைக் கண்காணித்துக் கண்டிப்பாக இல்லாதவிடத்து தீய ஒழுக்கமுடையோர் எண்ணிக்கை அதிகரித்து சமூக ஒழுங்குகள் மீறப்படும் நிலையும் உண்டாகும்.

குடாநாட்டில் அத்தகைய ஓர் அருவருக்கத் தக்க நிலை மேலோங்கி வருவதனை அவதானிக்க முடிகிறது. புகைப் பிடித்தல், மதுவுக்கு அடிமைப்படுதல் ஆகியன மட்டுமன்றி, எதிலும் கட்டுப்பாடற்ற தன்மை, அமைதி அடக்கம் இன்றிய வன்தன்மை, பெரியோருக்கு மதிப்பளியாதிருத்தல், மற்றவர்களுக்குத் தொல்லை கொடுத்தல், அடுத்தவரின் வசதிகளைக் கெடுத்தல், கோபமூட்டுதல் ஆகிய பல்வேறு வகைப்பட்ட தீயபழக்கங்கள் அவர்களிடம் வளர்ந்து வருவது கவலைக்குரியதாகும். இதனால் எமது சமூகப் பெறுமானங்கள் தேய்ந்து போகின்றன.

இந்நிலையை நிமிர்த்தி எடுத்து நேராக்கி நல்லொழுக்கம் உள்ள இளம் சமுதாயத்தை உருவாக்குவதற்கு பலவகைப் பணிகள் தேவையாகின்றன. நெருக்கடிகால நிலை உணர்வுடன் அவசர அறிவூட்டல்கள் வேண்டப்படுகின்றன

தீய பழக்க வழக்கங்கள் இல்லாத மூத்தவர்கள் சேர்ந்து கிராமந்தோறும் நல்லொழுக்கக் குழுக்களை உருவாக்கி தீய ஒழுக்கத்தினால் உண்டாகும் கேடுகளை இளவயதினருக்குத் தொடர்ந்து அறிவூட்டுவது அவற்றில் ஒன்றாகலாம்.

வெளிநாடுகளில் இப்பணியைச் செய்வதற்கென நிறுவனமயப்படுத்தப்பட்ட தொண்டர் மற்றும் சமூக நல நிறுவனங்கள் செயற்படுகின்றன. அத்தகைய முயற்சியும் செயற்பாடும் எமது பகுதியிலும் தேவையாகின்றன.

# விசாரணைக்குழுவின் பட்டியல்: ஈ. பி. டி. பி. கண்டனம் தெரிவிப்பு

### ஒருவர் மட்டுமே இனம் காணப்பட்டுள்ளாராம்

யாழ்ப்பாணம், ஒக். 3

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதான பின்னர் தகவல் தெரியாதுள்ளவர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பட்டியல் குறித்து யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. அமைப்பாளர் வி. கே. ஜெகன் அதிர்ச்சியும் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் பின்னர் குடாநாட்டில் கைதாகி தகவலற்றோர் தொடர்பாக ஈ. பி. டி. பியும் ஒரு பட்டியலைத் தயாரித்ததாகவும்—

பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழு வெளியிட்ட 176 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியலில் இருந்து ஒருவரது விவரம் மட்டுமே ஈ. பி. டி. பி. யின் பட்டியலில் இனம் காணப்பட்டுள்ளது என்றும்—

மிகுதி 175 பேரும் பல்வேறு கட்டங்களில் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழு மக்களை ஏமாற்ற நினைப்பது விசாரணைக்குழு மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைப் பலவீனப்படுத்துவதாகவே அமையும் என்றும் அவர் கூறினார். (இ)

# பத்மநாதனுக்கு பிணை அனுமதி

இரகசியப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் யாழ். அரச அதிபர் செல்லையா பத்மநாதன் இன்று பிணையில் அனுமதிக்கப்படுவார் எனத் தெரியவருகிறது.

இவருக்கெதிரான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிவான் மேர்வின் காமினி விஜேதுங்க முன் எடுக்கப்பட்ட சமயம், இவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே. வி. தவராசா, இவரைப் பிணையில் விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று தெரிவித்தார்.

இவர் பிணையில் விடுதலை செய்யப்படுவதற்கான நிபந்தனைகளையும், பிணைத் தொகையையும் நீதிவான் இன்று அறிவிப்பார். (இ-3)

# டொனால்ட் கிண்ண கிரிக்கெட் மிக விறுவிறுப்பான கட்டத்தில்!

டொனால்ட்கணேஷகுமார் ஞாபகார்த்தமாக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் தோற்பந்து கிரிகெட் சுற்றுப் போட்டி, இரண்டாவது சுற்றின் இறுதிக் கட்டத்தை— விறுவிறுப்பான நிலையை— அடைந்திருக்கின்றது.

யாழ். மத்தியகல்லூரி, யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானங்களில் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களின் பெறுபேறுகள் வருமாறு:-

**கிறாஸ்கொப்பர்ஸ் எதிர் பல்கலைக்கழகம்**

முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 40 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 184 ஓட்டங்களை பெற்றது.

ஆர். வரதன் 55, ஜெகஜீவன் 24, ராஜசேகரம் 33, மதியழகன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். ஞானசேகரம் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும், சிவன் சேய் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 27. 2 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 56 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ஜசிதரன் 15 ஓட்டங்களைப் பெற்றார். ரி. நரேஸ் 18 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும், சிறிதரன் 6 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும், எஸ். வரதன் 8 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்.

பல்கலைக்கழக அணி வீரர் ஆர். வரதன் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

**ஜொலிஸ்ரார்ஸ் எதிர் பற்றீசியன்ஸ்**

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 39 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 131 ஓட்டங்களை பெற்றது. கார்த்திக் 39, சிவராஜ் 17, ஜெயந்திரன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றனர். றொஸ்ரன் 15 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும், பிரசாந்தா 32 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும், பேட்டி 24 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 29. 3 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது. ஷார்ஜகான் 18, நிசாந்தன் 20, பேட்டி ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றனர். அனோஜன் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும், கோகுலபாலன் 37 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

ஜொலிஸ்ரார்ஸ்அணி வீரர் ஏ. ஸி அனோஜன் ஆட்ட நாயகனாத் தெரிவானார்.

**மானிப்பாய் பரிஷ் எதிர் ஜொனியன்ஸ**

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 39 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. சஞ்ஜீவ் 37 சிறிதரன் 16, அரவிந்தன் 74 ஓட்டங்களைப்பெற்றனர். அ. பாஸ்கரன் 29 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும், பாஸ்கரன் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும், மோகன் 31 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும், வரப்பிரதன் 33 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்.

### விளையாட்டு அரங்கு

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஷ் அணியினர் 49 ஓவர்களில 8விக்கட் நஷ்டத்திற்கு 184 ஓட்டங்களைப் பெற்றுவெற்றியீட்டினர். வீரசிங்கம் 44, பாஸ்கரன் ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களைப்பெற்றனர். ரூபேந்திரன், சஞ்ஜீவ் ஆகியோர் 2 விக்கட்டுகளை வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக மானிப்பாய் பரீஷ் அணி வீரர் எஸ். பாஸ்கரன் தெரிவானார்.

**சென்றலைட்ஸ் எதிர் கொக்குவில் ஸி. ஸி.ஸி.**

முதலில் துடுப்பெடுத்தாடிய கே. ஸி. ஸி. ஸி. அணி 47 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. சபாநாத் 32, கேதீஸ்வரன் 23, ஜனகன் ஆட்டமிழக்காமல் 17, சிவகரன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களைப் பெற்றனர். சண்முகலிங்கம் 38 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும், ரஜீவன் 20 ஓட்டங்களுக்கு 2விக்கட்டுகளையும் வீழ்த்தினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 33. 3 ஓவர்களில் 4 விக்கட் இழப்பிற்கு 155 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது. சசிகுமார் 34 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளை வீழ்த்தினார்.

சென்றறைட்ஸ் வீரர் எஸ். பி. ரஜீவன் ஆட்ட நாயகனகத் தெரிவானார்.

**யூனியன்ஸ் எதிர் கிறாஸ் கொப்பர்ஸ்**

முதலில்துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 30 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. வரதராஜன் 17, மாசிவன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பார்த்திபன் 33 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் நிமலன் 25 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர் யூனியன்ஸ் அணியினர் 22. 3 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 106 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டினர். சீராளன் ஆட்டமிழக்காமல் 59, நாகராஜா 23 ஓட்டங்களைப் பெற்றனர்.

யூனியன்ஸ் வீரர் கே. சீராளன் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இதுவரை நடைபெற்ற ஆட்டங்களின் படி அணிகள் பெற்ற புள்ளிகள் வருமாறு:-

| அணி | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| மானிப்பாய் பரிஷ் | 3 | 2 | 1 | 10. 96 |
| பல்கலைக்கழகம் | 3 | 2 | 1 | 10. 16 |
| சென்றலைட்ஸ் | 3 | 2 | 1 | 10. 14 |
| கே. ஸி. ஸி. ஸி. | 3 | 2 | 1 | 9. 93 |
| ஜொனியன்ஸ் | 3 | 1 | 2 | 9. 38 |
| ஜொலி ஸ்ரார்ஸ் | 2 | 2 | — | 8. 32 |
| யூனியன்ஸ் | 3 | 1 | 2 | 7. 75 |
| கிறாஸ்கொப்பர்ஸ் | 4 | — | 4 | 6. 06 |
| பற்றீஷியன்ஸ் | 2 | 1 | 1 | 5. 71 |

# கைதான மூவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ் நகரப் பகுதியில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைகளில் சம்பந்தப்பட்டனர் என்று கூறப்படும் மூவரை யாழ் பொலீஸார் கைது செய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

மூன்று டெக், ஜெனரேட்டர்கள் உட்பட ஏராளமான மின்சார உபகரணங்களை களவடியதாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மூவரையும் யாழ். நீதிவான் ஏ. என். எஸ். இராமச்சந்திரன் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். [இ-3]

# திறந்த வெளி அரங்கு

சாவகச்சேரி, ஒக். 3

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகாவித்தியாலய நடராசர் திறந்த வெளி அரங்கு புனரமைப்பு செய்யப்பட்டு இன்று வெள்ளி காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வு வித்தியாலய அதிபர் மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

# சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் சமய அறிவுப் போட்டி நாளை 4 ஆம் திகதி பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆகிய நான்கு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

# நவராத்திரி...

(ஐந்தாம் பக்கத் தொடர்)

வள் சிவசக்தி ஐக்கிய ஸ்வரூபிணியாக வீற்றிருந்து அருள் புரிகின்றாள். "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என உமாபதி சிவாச்சாரியர் கூறுவதனையும் நோக்கலாம்.

ஸ்ரீ சக்கர ஆராதனையினால் பரமேஸ்வரன் மகிழ்கிறான். சிவத்தை அடையச் செய்பவள் சக்தி. இவளுக்கு சிவஞானப்ரதாயினீ என்ற திருநாமமும் உண்டு.

இவ்விதம் வைதீக மரபினின்று அக்னி மூலமாகவும், ஆகமமரபு தழுவிய விக்கிரக ஆராதனைகளினாலும் சாக்ததந்திர மரபின்வழி ஸ்ரீ சக்கரத்தில் ஆவாஹித்தும், மூவகை வழிபாட்டு முறைகளில் நவராத்திரி காலத்தில் அம்பிகையை உபாசிப்பவர்களுக்கு பல்வகைப்பட்ட நலன்களும், பேறுகளும் பல்கிப் பெருகும் என்பதில் ஐயமில்லை.

நல்லூர் சிவன் கோயிலில் நவராத்திரி காலத்தில் இப்போது கடந்த திங்கட்கிழமை முதல் சத்சபிண்டீ யக்ஞம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ★

— ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா

# நாளை

**புரட்டாதி 18**

சனிக்கிழமை

திதி: திருதியை பின்இரவு 2.49 வரை.

நட்சத்திரம்: சுவாதி முன்இரவு 8.10 வரை.

சுபநேரம்: 3.02–4.32

ராகுகாலம்: 9.02-10.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திருமலையில் உண்ணாவிரதம் இருக்க அனுமதி மறுப்பு

## போராட்டம் நடக்கும் என்கிறது புளொட்

யாழ். குடாநாட்டில் காணாமற்போனோர் விவகாரம் தொடர்பாக இன்று திருகோணமலை சிவன் கோயில் முன்பாக ஏற்பாடு செய்யப்பட்ட உண்ணாவிரதத்துக்கு படையினர் அனுமதி அளிக்க மறுத்துள்ளதாக புளொட் அமைப்பு தெரிவித்துள்ளது.

''அனுமதி மறுக்கப்பட்ட போதும் சாத்வீகப்போராட்டமான எமது போராட்டம் திட்டமிட்டபடி இன்று திருகோணமலை சிவன் கோயில் முன்பாக நடைபெறும்'' என்று புளொட் அமைப்பு நேற்று இரவு தெரிவித்தது.

## நாடாளுமன்றம் முன்...

(முதலாம் பக்கத் தொடர்)

யும்—

எமது அமைப்பு மேற்கொண்டு வரும் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால் கொழும்பில் நாடாளுமன்றத்துக்கு முன்பாக உண்ணாவிரதம் மேற்கொள்வோம்.

இப்படி புளொட் அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் தெரிவித்தார்.

நேற்று வவுனியாவில் நடந்த உண்ணாவிரதத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு அவர் கூறினார்.

தொடர்ந்து திருமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும்.

அதற்கு சரியான பதில் கிடைக்காது விட்டால் நாடாளுமன்றம் முன் உண்ணாவிரதம் இருப்போம்.

அதுவும் சரிவராவிட்டால் சர்வதேச மட்டத்தில் பிரசாரம் செய்வோம் என்றும் அவர் கூறினார்.

வவுனியா கந்தசுவாமி கோயில் முன்பாக நேற்று நடைபெற்ற அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் பலர் கலந்துகொண்டனர்.

புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த உண்ணாவிரதத்தில் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள், வர்த்தகர்கள், முஸ்லிம் மக்கள், மாணவர் என பெருந்தொகையானவர்கள் பங்குபற்றினர்.

புளொட் அமைப்பின் உப-தலைவர் என். மாணிக்கதாஸன், வவுனியா நாடாளுமன்ற நகரசபைத் தலைவர் ஜி. லிங்கநாதன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

நேற்று மாலை 3 மணியளவில் திட்ட அமுலாக்கல், நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நீராகாரம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்த இவர் அங்கு சமுகமளித்த போது மகஜர் ஒன்றும் அவரிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி வழங்கினார். (இ-3-21-164)

## பூநகரி...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை முல்லைத்தீவுக் கடலில் 9 கடல் மைல் தூரத்தில் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் விடுதலைப் புலிகளின் 3 படகுகள் நுழைந்த போது அவற்றின் மீது தாக்குதல் நடத்தியதாகவும்—

3 கடற் புலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்—கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (இ-21-3)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்)

குழுவின் உதவியுடன் காயமடைந்த இவர்கள் நேற்றுக் காலை மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர்.

மாமாங்கம் வாவியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒருவரும் இத்தாக்குதலால் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-3-21)

## வடக்கு - கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்திருப்பதாவது:-

இனப்பிரச்சினைக்கு உடனடியாக தேவை கௌரவமான அரசியல் தீர்வாகும். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்த கூடியதும் அரசியல் தீர்வுதான்.

ஜனநாயகம், இறைமைத்துவம், கௌரவம் என்பனவற்றின் அடிப்படையிலான தீர்வொன்றையே தமிழ் பேசும் மக்கள் நாடி நிற்கின்றனர். அதற்காகவே இத்தனை கால இழப்புகளையும், துயரங்களையும் தாங்கி நிற்கின்றனர்.

அரை குறையான தீர்வுகள் தங்கள்மேல் திணிக்கப்படுவதை தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை நியாயமான அரசியல் தீர்வொன்றைக் காணத் தயாராக இருப்பதாக அரசாங்கமும் கூறி வருகிறது. அவ்வாறான முயற்சிக்கு தோள்கொடுக்க நாம் தயாராகவே உள்ளோம்.

அரசியல் தீர்வென்பது நாட்டின் பிரிவினைக்கு எதிரான தீர்வாக முன்வைக்கப்படுகையில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைக் கொண்ட வடக்கு — கிழக்கு எதற்காக இரண்டாக பிரிக்கப்படவேண்டும்?

நாட்டை பிரிக்கக் கூடாது என்பவர்கள் வடக்கு — கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்பது எதற்காக?

நாட்டின் ஒற்றுமையை விரும்புபவர்கள் தமிழ் பேசும் மக்கள் மட்டும் ஒற்றுமையாக இருக்கக் கூடாது என்று விரும்புவது ஏன்?

ஐக்கிய இலங்கைக்குள் கௌரவமான அரசியல் தீர்வை எட்டுவதே எமது விருப்பமாகும். ஆனால் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையையும் அவர்களின் தேசிய இனத் தன்மையையும் சிதைப்பதன் அடிப்படையில் நாட்டின் ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முடியாது ஐக்கிய இலங்கைக்கான விலையாக தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அபிலாசைகளை பலியிடக் கோருவது நியாயமான தீர்வாகவும் அமையாது.

வடக்குக் கிழக்கை பல துண்டுகளாக பிரிப்பது, ஒவ்வொரு துண்டுக்கும் வாக்கெடுப்பு நடத்துவது என்பன மேலும் மேலும் இனப்பிரச்சினை தீவிரமடையவே வழி வகுக்கும் அவ்வாறான தீர்வுகள் தமிழ் பேசும் மக்களின் அரசியல் கோரிக்கைகளை திருப்தி செய்யப்போவதில்லை.

தமிழ் பேசும் மக்கள் வேறு எந்தவொரு இனத்தின் உரிமையையும் பங்கு போட்டுக் கொள்ளவோ பறித்தெடுக்கவோ நினைக்கவில்லை. மறுக்கப்பட்ட உரிமைகளை கோரியே போராட ஆரம்பித்தனர்.

அரசியல் தீர்வு முயற்சிகளில் முதலாவதாகவும், முக்கியமாகவும் கருத்தில் கொள்ளப்படவேண்டியது தமிழ் பேசும் மக்களதும் தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் அபிப்பிராயமே ஆகும்.

தமிழ் கட்சிகள் முன்வைத்த தீர்வு பற்றிய நிலைப்பாடுகளை அரசாங்கம் கருத்தில் கொள்ளாமல் இருப்பது கவலையை தருகிறது.

அரசாங்கம் நீதியான தீர்வொன்றை காண விரும்புமானால், வடக்கு — கிழக்கு ஒரே நிர்வாக அரசியல் அலகு என்ற அடிப்படையில் அதிகாரப் பகிர்வை வழங்க முன்வரவேண்டும். அரசியல் துணிச்சலுடன் உறுதியான தீர்வைக் காணவேண்டும்.

அவ்வாறான, நியாயமான தீர்வுக்கு இடையூறுகள், ஒத்துழைப்புகள் கிடையாது பொது இணக்கங்கள் உருவாக முடியாத சூழ்நிலையில் சகல தரப்பையும் ஒரு மேசைக்குள் கொண்டு வரக்கூடிய மூன்றாம் தர மத்தியஸ்தத்தை அரசாங்கம் நாட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

காலதாமதங்களும் அரைகுறைத் தீர்வுகளும் மேலும் நெருக்கடி வலுக்கவும் சமாதானம் மேலும் தொலை தூரத்துக்கு செல்லவுமே வழி வகுக்கும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## ஓவியர்களின் கவனத்திற்கு!

உலக உளநல நாளையொட்டி சாந்திகமும் உதயனும் இணைந்து நடத்தும் ஓவியப் படைப்பாக்கக் களத்தில், ஓவியங்களை ஒப்படைப்பதற்கான திகதி 25-10-97வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு:

16-10-97 ஆம் திகதி உதயனில் பார்க்கவும்.

## பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் சிவராசன் கஜந்தன்

**03 - 10 - 1997**

செல்வன் கஜந்தன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று 3 — 10 — 97 இல் தனது இல்லத்தில் அன்புப் பெற்றோர் சிவராசன் - மனோரதி சகிதம் கொண்டாடுகின்றார். இவரை பல்வகைச் சித்திகளுடனும் பல நூற்றாண்டு வாழ்கவென அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர் அன்புடன்வாழ்த்துகின்றார்கள்.

அன்புப் பெற்றோர்;
சிவராசன் - மனோரதி தம்பதிகள்,
**சிறீசிவா ரேடர்ஸ்**
72, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(50253)

## விக்னா கல்வி நிறுவனம்

**கணக்கீடு**

**திரு. பாலவாசன்**

99 வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

ஆரம்பம்: **05 - 10 - 97**
9.00 a. m.

(50256)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆசை செல்லம்மா

ஓவியர் ஆ. இராசையாவின் அன்புத் தாயார் திருமதி ஆசை செல்லம்மா அவர்கள் 1-10-97 புதன்கிழமை காலமானார்.

இவர் அம்பலவன்—ஆசை (வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும், இராசையா, உதயகுமார் (ஜேர்மனி), அருந்தவதேவி, மஞ்சுளாதேவி, ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானாம்பிகை, ஜெயந்திமாலா (ஜேர்மனி), கனகலிங்கம் (ஆசிரியர் றோ.க.த.க. பாடசாலை, நாவாந்துறை), கலைதாசன் (ஓட்டுநர்) ஆகியோரின் மாமியாரும், காயத்ரி, சாம்பவி, சாரங்கி, கௌதமன், சிவானுஜன், சங்கவி, கீர்த்தனன், அபிநயன் ஆகியோரின் பேர்த்தியும், தியாகராசா, காலஞ்சென்ற செல்லத்துரை, காலஞ்சென்ற பாக்கியம், இராசதுரை, இரத்தினம் (ஜேர்மனி), நடராசா ஆகியோரின் சகோதரியும், சந்திரலிங்கம், பூபாலசிங்கம், தவமணிதேவி, புஸ்பராணி, தேவராணி (லண்டன்), சிவபாதலிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும், செல்வராணி, நற்குணவதி, சிவஞானம், நடராசா, ஜெகேந்திரபோஸ் (லண்டன்), ஜெலஜா, றெஜிதா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4-10-97 சனிக்கிழமை காலை நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு அச்சுவேலி வல்லை மயானத்துக்கு எடுத்துச் சென்று தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. இராசையா (மகன்)
(ஓவியர்)
சரஸ்வதி வித்தியாசாலை ஒழுங்கை,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(50254)

# லலிதா புடைவை மாளிகை

நாளை 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11-00 மணியில் வரும் சுபவேளையில் எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

ஆடவரும், பெண்டிரும், ஆடிவரும் குழந்தைகளும் அணிந்து ஆனந்தமடைய ஆயிரக்கணக்கான துணிவகைகள்.

**சிறந்த ரகம்! நிதான விலை!**

**லலிதா புடைவை மாளிகை**

கொண்டாட்ட புடைவைகளுக்கு குடும்பத்துடன் நாடுங்கள்!

கிளை:

லலிதா புடைவை மாளிகை
5, 6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

லலிதா புடைவை மாளிகை
B, 3, சந்தை வீதி,
வவுனியா.

விளம்பர அமைப்பு:
ஷண் றெக்கோடிங் சென்டர்,
பெரியகடை.

(50207)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org